gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 10

ACC-NO-34337

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | விசுவாவசு ஐப்பசி 1965 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

31—10—65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

நம் சமாஜத்தின் சார்பில் சென்னை லிங்கி செட்டித் தெருவில் உள்ள மல்லிகேச்சுரர் திருக்கோயிலில் திருத்தொண்டர் புராண விரிவுரை ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை தொடர்ந்து நடத்தப்பெறும். மேற்குறித்த விரிவுரைத் தொடக்க விழா 12—9—65 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு திரு. ஆர். சதாசிவம், பி. ஏ., எம். எல். (சென்னை மாநில உயர்நீதி மன்ற நீதிபதி) அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள். அன்பர்கள் பலரும் கேட்டுப் பயனடைய வேண்டுகின்றோம். திருமுறைக்காவலர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ., அவர்கள் ஆதரவில் இவ் விரிவுரைகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

நம் சமாஜத்தின் சார்பில் 24—9—65 அன்று மாலை 6 மணிக்கு பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் (பி.ஏ., எல்.டி.) தலைமையில் தவத்திரு. ஐயாறடிகள் "நாவுக்கரசர் அளித்த நற்செல்வம்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

26—9—65 அன்று மாலை 6 மணிக்கு அருணந்தி சிவாசாரியார் குருபூஜை விழா மயிலை கபாலீச்சுரர் தேவார பாடசாலையில் நம் சமாஜச் சார்பில் நிகழ்ந்தது. டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி அவர்கள் தலைமையில் திரு. கொ. நீ. சிங்காரவேலு, திரு. ந. ரா. முருகவேள், திரு. நல்முருகேச முதலியார் ஆகிய இம்மூவரும் "சைவ சித்தாந்தத்தின்படி வினை" என்பது பற்றிக் கருத்தரங்கு முறையில் சொற்பொழிவாற்றினர். டாக்டர் பா. நடராஜன் அவர்கள் நோக்காளராயிருந்து தக்க முடிவுரை கூறினார்கள். அம்பை சங்கரனாரால் நன்றி கூறப் பெற்றபின் கூட்டம் இனிது முடிந்தது.

நம் சமாஜச் சார்பில் 10-10-65 அன்று வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் காலை 9 முதல் மாலை 4-30 வரை உள்ளொளி நாட்டக் கூட்டம் (அந்தர் யோகம்) நிகழ்ந்தது. திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் இக்கூட்டத்தைச் செம்மையுறத் தலைமை வகித்து நடாத்தினார்கள். இதற்குரிய எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுள்ள வாலாஜாபாத்து இந்து மத பாடசாலையினருக்கு சமாஜத்தின் நன்றி உரித்தாகுக.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | விசுவாவசு ஐப்பசி அக்டோபர் 1965 | இதழ் 10

பெரும்பிரிவுகள்.

(துணையாசிரியர்)

18ஆம் பட்டம் சிவஞான பாலைய சுவாமிகள்

ஸ்ரீமத் ஞான இராஜதானியான இனும் பொம்மைய பாளையம் திருக்கயிலாய பரம்பரைப் பெரிய மடம் சிவ கஞ்சி மயூராசல நிவாச யதீச்சுரகர்த்தரான மயிலம் தேவத்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்வம் இனும்தார் 18வது பட்டம் ஸ்ரீமத் சிவஞாள பாலைய சுவாமிகள் 21-9-65 செவ்வாய் இரவு 11-30 மணிக்கு இறைவனோடிரண்டறக் கலந்தனர் என்பதை சமாஜ அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருள் திரு சுவாமிகள் ஞானச் செங்கோல் ஏற்று உலகுக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அவற்றுள் தலைசிறந்தது மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி நிறுவியமையே யாகும். பணத்தால் மேம் பட்ட பல திருமடங்களுக்கும் முந்திக்கொண்டு தமிழ்க் கல்லூரி நிறுவிய பெருமை இச்சுவாமிகளையே சாரும். அத் துடனன்றி நம் சமாஜத்துக்கு இம் முனிபுங்கவரின் ஆசி எப்போதும் உண்டு.

1940ல் நம் சமாஜ முப்பத்தைந்தாம் ஆண்டு விழா மயிலத்தில் கோவைகிழார் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அன்று தொட்டுதான் அடியேனுக்கும் சமாஜத் தொடர்பு கிட்டியது. அவ்வமயம் யான் மயிலந் தமிழ்க் கல்லூரி மாணவனுய்ப் படித்துக் கொண்டிருந்தேன். அவ்வாண்டு விழா நிகழ்ச்சிகள் இப்போதும் என் மனக்கண்முன் தோன்றுகின்றன. பல அறிஞர் பெருமக்களும் அவ்விழாச் சிறப்பைப்போற்றினர். மேலும் 1958லும் நம் சமாஜ ஐம்பத்து மூன்ருவது ஆண்டு விழா இச் சுவாமிகளின் ஆசிப் பெருக்காலேயே சிறப்புற நிகழ்ந்தது. நம் சமாஜ ஐம்பத்தொன்ரும் ஆண்டு விழா திருப்பெண்ணுகடத்தில் நம் சுவாமிகளின் தலைமையின் கீழ் நிகழ இருந்தது. ஆனுல் சில அசந்தர்ப்பங்களால் சுவாமிகள் அம் மாநாட்டில் தலைமையேற்க இயலாது போயிற்று.

சுவாமிகள் நம் சமாஜத்தின் ஆயுள் உறுப்பினர். அருங்கலை விநோதர். திருவாசகம், தேவாரம் முதலிய நம் திருமுறைகளில் சிந்தை தோய்ந்தவர். பிறர் பாடக்கேட்ட போது தம்மை மறக்கும் தன்மையாளர். இன்னும் சிவப்பிரகாச சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி, சிவசுப்பிரமணிய சுவாமி உயர் தொடக்கப் பள்ளி முதலிய பல கல்வி நிலையங்களை மயிலத்தில் தொடங்கிச் சிறப்புற நடத்தி வருகின்ருர்கள். மயிலமமர் முருகப்பெருமானுக்கு இவர்கள் வழிபாடு நடத்தும் பெருமையே ஒரு தனிச் சிறப்பாகும்.

அத்தகைய பெரியார் 21-9-65 இரவு 11 மணி வரை பிரபுலிங்கலீலையில் அல்லம தேவனின் அரும்பெறற் சிறப்பியல்புகளைப் படித்து முடித்து எம்பெருமான் இணையடியையே சிந்தித்தவராய்ச் சிறிதுநேரத்தில் இவ்வுலகினின்று தம் பூதவுடலை மறைத்துக் கொண்டார் என்பதிலிருந்து அப்பெரியாரின் பெருமை நன்கு புலப்படும்.

நேரே கண்டு மகிழற்குரிய வாய்ப்பின்றிப் போயிற்றே என்ற ஒரு துன்பந் தவிர அவர்கள் அருள் பல உருவங்

களில் நமக்கு என்றும் உறுதுணையாயிருக்கும் என்பதுறுதி. நம் சமாஜத்தின் சார்பாக அவர்கள் ஆன்மா உயர்நிலே அடைந்தமை குறித்து இறுதி வணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றோம்.

அச்சுவாமிகளின் தொண்டுகளை ஞானச் செங்கோல் ஏற்றிருக்கும் பத்தொன்பதாம் பட்டத்துச் சிவஞான பாலேய சுவாமிகள் இன்னும் சிறக்கச் செய்ய மயிலந்தண் மாமலே வாழ்வாய பெருமான் இன்னருள் பாலிக்கவேண்டும் என்று அவனருளேயே வாழ்த்தி வணங்குகின்றோம்.

சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்

நம் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் பெருந்தலேவர் களுள் ஒருவராகிய சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் 27-8-65 அன்று திருக்கேதீச்சுரத்தில் இறைவன் திருவடி நீழலடைந்தார்கள் என்பதை மிக வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அவர்கள் இலங்கையில் சில ஆண்டுகள் அமைச்சர் பதவி வகித்து வந்தார்கள். அவர் தமிழுக்கும் சைவத்துக் கும் தொண்டாற்றிய ஒரு சிறந்த பெரியார் ஆவர். 1954ல் விருதுநகரில் நிகழ்ந்த நம் சைவசித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாவில் தலேமை தாங்கி அருங் கருத்துகள் பல வழங்கி ஞர். அவர்களுடைய முயற்சியினுலேயே 1960-61 ஆம் ஆண்டில் நம் சமாஜ ஆண்டு விழா ஈழநாட்டில் திருக்கே தீச்சுரத்தில் நிகழ்ந்தது. திருக்கேதீச்சுரத் திருக்கோயிலேப் புனர் நிர்மாணம் செய்ய அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி கூறும் தரத்ததன்று. அவரும் அவர் வாழ்க்கைத் துணேவியாரும் அக்கோயில் திருத்தொண்டுகளிலீடுபட்டுத் தங்கள் வாழ்நாளேத் தியாகம் செய்தனர் என்றே கூற லாம். திருக்கேதீச்சுரத்தையே தங்கள் உறைவிடமாகப் பெற்று அப்பெருமான் கழலிணேகளேயே மனத்திற் கொண்டு அவன் தொண்டுகளேயே செய்து வாழ்ந்த அப் பெரியார் பிரிவு நம் சமாஜத்துக்கு ஒரு பேரிழப்பாகும். அவர்களோடு கலந்து பழகும்போதுதான் அவர்களின் அரும்பெருங் குணங்கள் மிகவும் எங்களே ஈர்த்தன,

தவ இருக்கை, சொற்பொழிவுக் கூடம், நந்தவனம் முதலியவைகளால் சூழப்பெற்று நல்ல சூழ்நிலையில் திருக்கேதீச்சுரப்பதியையே உருவாக்கிய பெருமை இவர்களுக்கே உரியது. அண்மையில்தான் நம் உயர்திருவினுர் நடேச பிள்ளையவர்களை யிழந்து அலமந்தோம். அத்துயர் மனத்தை விட்டு மறைவதற்கு முன்னரே இப்பெரியார் பிரிவாம் பேரிடி நம்மைத் தாக்கியுள்ளது. "இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே" என்ற அப்பர் பெருமானின் அடித்தொண்டர்கள் நாம். அப்பெருமான்போன்று மன ஆற்றல் நாம் பெருவிடினும் சிறிதாவதுபெற்று மனஅமைதிகொள்வதே சாலச்சிறந்ததாகும். அவர் குடும்பத்தினருக்கு நம் சமாஜத்தினரின் ஆழ்ந்தவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம், பிரிந்த அப்பெரியாரின் ஆன்மா "உயர்தரு மாதோட்டத் தண்ணல் நண்ணுகேதீச்சுரம் அடைபவர்க் கருவினை யடையாவே" என்ற சம்பந்தப் பெருமானுர் வாக்குப்படி வெய்ய வினையிரண்டும் வெந்தகன்றதனுல் திருக்கேதீச்சுரப் பெருமான் திருவடி நீழலில் தங்கி இன்புற்றிலங்குமென்பது உறுதி. சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் போன்று நாமும் ஒல்லும் வகையான் சமயத் தொண்டுகளி லீடுபட்டுப் பிறப்பின் பயனைப் பெற்றுய்வதே அப்பெரியாருக்கு நாம் காட்டும் நன்றியாகும். திருக்கேதீச்சுரத் திருத்தொண்டராம் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் புகழ் சிறக்க என்று அப்பெருமான் கழலிணைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

சபா - சிவப்பிரகாசம் பிள்ளை.

சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் திரு. சபா - சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள் 5-9-65 அன்று தமது 93 ஆவது வயதில் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் திருவடி நிழலில் கலந்தார்கள். அவரைப் பிரிந்த குடும்பத்தாருக்கு நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிள்ளையவர்கள் 1872 ஆம் வருடம் பிறந்தார். ஏறக் குறைய ஒரு நூறு வருஷம் அவர் வாழ்ந்தார். வாழ்க்கை முழுமையும் சிதம்பரத்திலேயே தமிழும் சைவமும் வளர்க் கப் பயன்பட்டது. சென்ற மூன்று வருடகாலம் அவரோடு பழகும் பேறு நமக்குக் கிடைத்தது. அவரோடு சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தாலும் அந்நேரத்தில் சென்ற தலை முறைக்குரிய சமயவரலாறு தமிழ் வரலாற்றில் ஒரு சிறு பகுதியை நமக்கு ஒரு பல கணியைத்திறந்து வெளி உலகைக் காட்டுவது போல் காட்டுவார். இவ்வாறு நமக்குக் காட்ட வல்ல பெரியவர்கள் மறைந்து வருவதுபற்றி எண்ண நம் மனம் வருந்தாமலிராது.

இவர் தில்லைக்கு அருகிலுள்ள வீரசோழகன் என்ற ஊரில் கார்காத்த சைவ வேளாளர் குலத்தில் சபாபதி பிள்ளையின் புதல்வராகப் பிறந்தார். இவர் பிறந்த தினம் மெய்கண்டதேவர் சிவப்பேறடைந்த புண்ணிய தினமாகிய ஐப்பசி அமாவாசை சுவாதி. இளமையிலேயே தமிழும், ஆங்கிலமும் சைவமும் கற்றுத் தேர்ச்சியும் பெற்றார். பதி னெட்டு வயதில் ஆசிரியர் பயிற்சிபெற்று அரசாங்கச் சான்றிதழும் பெற்று நீண்டகாலம் ஆசிரியப் பணி புரிந் தார். இளமையில் தாமே ஒரு தமிழ்க் கல்விச் சாலை நடத் தினார். உரிய காலத்தில் மணமாகிச் சிதம்பரம் ஆறுமுக நாவலருடைய சைவப் பிரகாச வித்தியா சாலையில் தர்க்க குடாரதாலுதாரி என்ற திருஞானசம்பந்தப் பிள்ளையிடம் தருக்க நூல் பயின்றார். ஆடூர் முதலான இடங்களில் தமிழ்க் கல்விச் சாலை வைத்துத் தமிழும் சைவமும் வளர்த் தார். சில சிற்றூர்களில் சிவாலயங்கள் கட்டுவித்தார். விசேட தீட்சை, நிர்வாண தீட்சதைகள் பெற்றுச் சிவ பூஜை வழுவாது செய்து வந்தார்; செப்பறைச் சுவாமிகளி டம் சித்தாந்த சாஸ்திரங்களைப் பயின்றார். சிதம்பரம் பச் சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும், ஆறுமுக நாவலர் தமிழ்க் கல்லூரியில் தலைவராகவும் பணி யாற்றி, உரியகாலத்தில் ஓய்வு பெற்றார். அதன்பின் பல இடங்களில் எவ்விதப் பிரதி பலனும் எதிர்பாராமல் சித் தாந்த பாடமும் சிவஞான வேதமும் போதிப்பதே தம்

வாழ்க்கை நியமமாகக்கொண்டார். 22-7-1950 இல் ஆனித் திருமஞ்சனத் தேர்த் திருநாளன்று தில்லை நடராஜர் ஆலயத்தில் இப் பெரியாருக்கு சைவப் பெருமக்களால் சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பேராசிரியர் என்ற பட்டம் வழங்கப்பெற்றது. இவரால் சாஸ்திரம் அறிந்தவரும் சிவ பூஜை மேற்கொண்டவரும் அநேகர். திருப்பெண்ணாகடம் மெய்கண்டார் ஆலயத்தில் பல ஆண்டுகள் சித்தாந்தம் பாடம் சொல்லி வந்தார்.

தமது 80 ஆம் வயதில் சிவஞான போதச் சிற்றுரைச் சுருக்கம் என்ற சிறு நூலும் பின்னர் இதன் விளக்கமான சிற்றுரை விளக்கமும் 1960 இல் சிவஞான சித்தியார் வினு விடையும் எழுதி வெளியிட்டார். சித்தாந்த சாத்திரங்கள் பலவற்றுக்குக் குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கிறுர். 1964 ஐப்பசி சுவாதியில் இவருடைய 93 ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாடியபோது சிவபூஜை செய்வோர் பதி னொருவரை வைத்து, வேறொருவர் ஸ்ரீ ருத்ரத்துக்குச் செப்பறை சுவாமிகள் செய்திருந்த தமிழ் மொழி பெயர்ப்பைப் படிக்க, மலரிட்டு அருச்சனை செய்யும்படி செய்து பிறந்த நாளைக் கொண்டாடினுர். எளிதாக இலக்கண பாடம் சொல்லவல்ல ஆசிரியர் என்று பெயர் பெற்றிருந்தார். வினைச் சொல் இலக்கணம் விளக்கும்படி இவர் எழுதி அச்சிட்டு வினியோகித்த வினைவிருட்சப் படம் இதை நன்கு விளக்கும்.

இவருக்கு சிவஞான சுவாமிகளிடத்தில் மிக்க ஈடுபாடு. அதனுல் தம் பேரனுக்கு சிவஞானம் என்றே பெயர் வைத்தார். வடக்கு வீதி சம்பந்தம் பிள்ளை ஒரு சமயம் ' ஐயா! திருமுறைகளில் எதைப் படிக்க வேண்டும்! அதிகம் படிக்க நேரமோ பக்குவமோ இல்லை '' என்று கூறினுர். '' தம்பி ! திருவாசகம் ஒன்றையே படி, அதுவே போதும் அதில் எல்லாம் உள்ளன '' என்று விடை கூறினுர். இதிலிருந்து திருவாசகத்தில் இவருக்குள்ள ஈடுபாடு நன்கு விளங்கும்.

திருவைந்தெழுத்தே எல்லா நோய்களுக்கும் மருந்து என்பது இவருடைய கோட்பாடு. இதன்படியே இவர் தம் வீட்டில் திருவைந்தெழுத்தை ஓதித் தீர்த்துவைத்த நோய்கள் பல. இவை பற்றிப் பிறகு எழுதுவோம். தெய்வ நம்

பிக்கை குறைந்தவர்களுக்கு இச் செய்திகளை நம்புவதும் கஷ்டமாயிருக்கும்.

இறந்து போகச் சில நாள் முன்னதாகத் தம் வீட்டில் நின்று கொண்டிருந்த போது அயர்ச்சியால் கீழே விழுந்தார். அதுமுதல் உடல் நலமில்லாதிருந்து சிலநாளில் காலமானார். படுக்கையில் இருந்து பிரக்ஞை குறைவாயிருந்த போதும் இவர் மனம் சதா சிவஞான போதத்திலேயே சென்றது. எந்த நேரமும் பன்னிரு சூத்திரங்களையும் பிரக்ஞை தவறியும்கூட சொல்லிக்கொண்டிருந்தார் என்று உடனிருந்தவர்கள் சொல்கிறார்கள். ஒருசமயம் இவர் மகன் நடனசபேசம் பிள்ளை தந்தை யருகில் சென்று பார்த்தார். மகன் என்று இவர் உணரவில்லை. யாரோ தம்பிரான் தம்மைக் காண வந்திருப்பதாக எண்ணினார்.

"யார் வந்திருப்பது; சுவாமியா? இப்படி இருக்கட்டும். சுவாமிக்குச் சிவஞான போதம் வருமோ?" என்று கேட்டார் பிரக்ஞை குன்றி யிருப்பதை மகன் உணர்ந்தார். "வரும்" என்று பதில் சொன்னார்; "சொல்லட்டும் பன்னிரண்டு சூத்திரமும் சொல்லட்டும்"

மகன் தொடங்கினார் "அவன், அவள், அது எனும் அவை மூவினைமையின்–தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்........."

"சரி. போதும், அவை என்றால் என்ன தெரியுமா? பிரபஞ்சத் தொகுதி........"

"திதி என்றால் தெரியுமா?.........திதி என்றால் நிலை பேறு; ஞாபகமிருக்கட்டும். நிலைபேறு......நிலைபேறு...... சரி! சுவாமி! போய் மறுபடியும் படிக்கட்டும். நன்றாய்ச் சிந்திக்கட்டும்.

இப்படியே இவர் பேசிக் கொண்டிருந்து சில நாளில் காலமானார். எந்த நேரமும் சாத்திரங்களையே சொல்லிக் கொண்டு இருக்கும் பேறு பெற்றார். 93 வயது வரை வாழ்ந்திருந்த இப் பெரியாருடைய் ஆன்மா நடராஜப் பெருமானுடைய குஞ்சித்த சேவடியைக் கும்பிட்டே இருக்குமென்பது உறுதி. (ஆசிரியர்)

வருணபுரம்

மு. அருணாசலம்

—★—

தமிழ்நாட்டில் நகரத்தார் திருப்பணி செய்துள்ள கோயில்கள் மிகப் பல. அவற்றுள் பெரும்பான்மை பாடல் பெற்ற கோயில்களாயினும், பாடல் பெறாதன சிலவும் உள்ளன. அவற்றுள் வருணபுரம் சிவன் கோயில் என்பது மிகவும் சிறப்பான ஒன்று.

இடம் :—இவ்வூர், தஞ்சை ஜில்லாவில் பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் செல்லும பஸ் சாலையில் இரண்டு மைல் தூரத்தில் சாலைக்கு மேற்காகக் கிழக்கு நோக்கிச் சாலையோரமாக உள்ளது.

பெயர் :—வருணபுரம், வருண க்ஷேத்திரம் என்ற பெயருடையது. இந்த இடம் மட்டியான் திடல் என்று சாமானிய மக்களால் வழங்கப்பெறுகிறது. இதுபற்றிய குறிப்பு நல்லூர்ப் புராணத்துள் காணப்படும். (இந்நல்லூர் என்பது இங்கிருந்து ஐந்து மைல் தூரமுள்ளது. அப்பர் சுவாமிகளுக்குச் சிரசில் சிவபிரான் திருவடி சூட்டிய தலம்.) சுவாமி கயிலாயநாதர் ; அம்பிகை நித்திய கல்யாணி.

கோயில் :—சிறிய கோபுரம். எதிரில் நாற்புறமும் கருங்கல் பதித்த படிகள் உடைய சிறு திருக்குளம். சிறிய கோயில். வெளி மதில்சுவர் முழுமையும் கருங்கல்லால் அமைக்கப்பட்டது. உட்பிரகாரம் உட்சுவர்கள் முதலிய எல்லாப் பாகங்களும் கருங்கல்லால் செய்யப்பட்டு மிகவும் திருத்தமாக உள்ளன. பிராகாரத் தரை கருங்கல்லால் பாவப்பட்டுள்ளது.

பிராகாரத்தில் தக்ஷிணாமூர்த்தி கோட்டம் கருங்கல்லால் சிறு கோயிலாகவே அமைக்கப்பட்டுள்ளது. தூண்களைக் கீழிருந்து இரண்டு சிம்மங்கள் தாங்குகின்றன. சிம்மங்களின் வாயில் தேங்காயளவு பெரிதான கருங்கல் குண்டுகள் குடைந்து வைக்கப் பெற்றுள்ளன. இத்தகைய வேலை இந்த நூற்றாண்டில் மிகவும் அபூர்வமானது.

மூர்த்தி :—வாயில் சுவரில் விநாயகரும், தண்டாயுதபாணியும் வெளிப்பிரகாரம் நிருதி மூலையில் விநாயகர் இருக்க வேண்டிய இடத்தில் உபயநாச்சியாருடன் கூடிய திருமாலும் தனிக்கோயிலில் அமர்ந்திருக்கிறார். சுவாமி சந்நிதியில் விநாயகர், முருகன், தக்ஷிணாமூர்த்தி சிறந்த வேலைப்பாடு. கோட்டங்களில் விநாயகர், லிங்கோத்பவர்; பின்புறம் முருகப்பெருமான், லக்ஷ்மி, பிரமன், சண்டேசர், துர்க்கை, மகாலிங்கம், பெரிய வடிவம். அம்பிகை சிறிய திருவுரு. திருமாளிகைச் சுற்றில் எல்லா உற்சவ மூர்த்திகளும் அழகாகச் செய்து வைக்கப் பெற்றுள்ளனர். வடபுறம் சுற்றில் பழைய விநாயகர், சண்டேசர், பைரவர், பழைய சிவலிங்கங்கள் வைக்கப் பெற்றுள்ளன. நவக்கிரகங்கள், தனிப் பைரவர் தனிக்கோயிலில் உள்ளார். நடராஜாவும் அம்பிகையும் அப்படியே.

வடகிழக்குப் பக்கத்தில் தனியாக மிகச்சிறு அளவிலே பள்ளியறை முழுமையும் கருங்கல்லால் கட்டி வைக்கப்பட்டுள்ளது. சுவர் தூண்கள், அடிவரிகள் யாவும் மிகுந்த சிற்ப வேலைப்பாடு கொண்டவை. இந்த வேலைப்பாட்டுக்கு அடிப்படையாய் உள்ள பக்திச் சிறப்பை எவ்வளவு போற்றினும் போதாது. நாலடி உயரம்கூட இல்லாத இந்தப் பள்ளியறைக்கு 35 ஆண்டுகளுக்குமுன் கட்டிட ஒப்பந்தம் பத்தாயிரம் ரூபாய் என்றால் இதன் அருமைப்பாட்டைச் சற்றே உணர முடியும். இன்று ஒரு லட்ச ரூபாய் செலவிட்டாலும் இதுபோல் அருமையாகச் செய்ய முடியாது.

பாடல் கல்வெட்டு :—எவையும் இல்லை.

திருப்பணி :—காரைக்குடி அ. மு. க. முத்துக்கருப்பஞ் செட்டியார் இக்கோயிலைக் கட்டியதாகச் சொல்வார்கள். 50 வருடத்துக்கு முன் திருப்பணி தொடங்கிப் பூர்த்தியாகி 1931 பிரமோதூத வருடம் கும்பாபிஷேகம் நிறைவேறியது. இவ்வூரில் தனியாக ஒரு சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் இருந்து இடிந்து போயினமையால் அவற்றைச் செட்டியார் இங்கு புதிதாக அமைத்தார்.

சுற்றியுள்ள பாடல்பெற்ற தலங்களில் அவர் திருப்பணி செய்ய எண்ணியபோது எந்தக் கோயிலும் கிடைக்காமையால் அவர் இங்கு தம்முடைய சொந்த நிலத்தின் மத்தியிலேயே இக்கோயிலைக் கட்டினார். சுற்றி அவருக்கு நிலங்கள் உள்ளமையால் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தார். மிகுந்த பலசாலியான மாங்குடி முண்டன் என்று வழக்குப் பெயர் பெற்ற சாம்ப பரமேசுவர ஐயர் என்பவர் தஞ்சை மராட்டிய மன்னரால் கௌரவிக்கப் பெற்று இங்கு வாழ்ந்திருந்தார். அவர் பரம்பரையாரிடம் செட்டியார் இந்த நிலத்தை விலைக்கு வாங்கினார்.

அக்காலத்தில் இத்திருப்பணிக்கு மூன்று லட்ச ரூபாய் செலவாயிற்றாம். மூன்று கோடி ரூபாய் செலவிட்டாலும் இன்று இவ்வாறு கட்ட முடியாது. இதன் சிற்பச் சிறப்பைக் கருதி எல்லோரும் யாத்திரை சென்று பார்க்க வேண்டிய இடம். கோயிலில் ஒரு சாண் பரப்புக்கூடச் சும்மா விட்டு வைக்கவில்லை. தூண்கள், சுவர்கள் முதலிய எல்லா இடங்களிலும் மிகவும் சிறப்பான சித்திர வேலைப்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. 20-ஆம் நூற்றாண்டில் திருப்பணியான கோயில்களில் இதற்கு இணையான வேலைப்பாடமைந்த மற்றொரு கோயிலைச் சொல்வது அரிது. இந்த நூற்றாண்டிலும் மிகுந்த பக்தியோடும் இவ்வளவு உன்னதமான வேலைப்பாடமைந்த கோயில் எழுப்பி இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது மிகுந்த மன எழுச்சி உண்டாகிறது.

சிறப்பு :—உற்சவமூர்த்திகள் இப்போதுதான் செய்து வைத்ததுபோன்ற பிரகாசத்தோடு காணப்படுகிறுர்கள். இதற்கு ஒரு வரலாறு சொல்லுகிறுர்கள். மூர்த்திகளை வார்க்கப் பொற்கொல்லரைத் தேடிய செட்டியார் தம்மிடம் வேலைக்கு வந்த பல வேறு பொற்கொல்லரிடமும் தங்கக் கலப்பையுடைய செப்பு உலோகத்தைக் கொஞ்சம் கொடுத்து வார்த்துத் தரும்படி சொன்னுர். அவர்கள் வார்த்துக் கொடுத்த உலோகத்தை வெட்டிப் பூட்டி வைத்தார். சிறிது நாள் கழித்துத் திறந்து பார்த்தபொழுது, ஒரு பொற் கொல்லர் வார்த்தது மட்டும் வெட்டிய இடம் மங்காமல் இருந்தது. மற்றவையாவும் மங்கி விட்டன. காரணம், இவர் மட்டும் பொன்னேடு பிற உலோகங்கலந்து ஏமாற்ற வில்லை; மற்றவர்கள் பிற உலோகங்கலந்து வார்த்தமையால் வெட்டுவாய் மங்கி விட்டது. இவர்களை நீக்கி, அந்த ஒருவரையே திருப்பணிச் செட்டியார் உலோக வேலைக்குத் தேர்ந்து எடுத்துக் கொண்டாராம்.

இவ்வளவு அழகு பெற அமைக்கப்பெற்ற கோயில் இங்கு இருப்பது பலருக்கும் இன்று தெரியாது. முக்கிய மான சாலை ஓரத்தில் இருப்பதால் எளிதில் யாரும் சென்று தரிசிக்கலாம். பூஜை முதலியன முறையாக நடைபெறு கின்றன. உரிய விழாக்களும் உள்ளன.

ஐப்பசி மாத விசேட தினங்கள்

7 (23-10-65) தீபாவளி விழா
9 (25-10-65) மெய்கண்டார் விழா
11 (27-10-65) பூசலார் நாயனுர் விழா
13 (29-10-65) ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் விழா
14 (30-10-65) கந்தர் சட்டி விழா
22 (7-11-65) திருமூல நாயனுர் விழா
23 (8-11-65) நின்றசீர் நெடுமாற நாயனுர் விழா
24 (9-11-65) இடங்கழி நாயனுர் விழா
29 (14-11-65) சத்தி நாயனுர் விழா

பால் நினைந்தூட்டும் தாய்

M. P. நாயகம் பிள்ளை, திண்டுக்கல்

—★—

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்பது திருவாசகத்தில் பிடித்த பத்து 9வது திருப்பாட்டு,

இந்த ஒரு திருப்பாட்டிலேயே மணிவாசகப் பெருந்தகையார் சைவ சித்தாந்தப் பேருண்மைகளைப் பொதிந்து வைத்திருக்கிறார் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. பால் நினைந்தூட்டும் தாய் : தாய்மார் மூவகையினராவர். குழந்தையின் பசியறிந்து அவ்வக் காலத்தில் தானே குழந்தையை எடுத்துப் பால் கொடுப்பவளை உத்தமத்தாய் எனவும், குழந்தை பால் வேண்டியழும் போது உடனே பாலூட்டும் தாயை மத்திமத் தாய் என்றும், குழந்தை பாலுக்கு அழுதும் உதாசீனமாய் வேறு வேலை செய்துகொண்டிருப்பவளை அதமத் தாய் என்றும் கூறலாம். சிவபெருமான் தமது குழந்தைகளாகிய ஜீவான்மாக்களைப் பக்குவமறிந்து ஆவன செய்பவனாதலால் அவன் உத்தமத் தாயாகின்றான். எனினும் அத்தாயினும் சிவன் சிறந்தவன் என்பதை

2, தாயினும் சாலப் பரிந்து : என்பதால் உபதேசிக்கின்றார். அதாவது சிவபெருமான் உயிர்மீது கொண்ட கருணை ஓர் உத்தமத் தாயின் அன்பைவிடச் சிறந்தது என்கிறார். தாய்ப் பால் தாய்மை யடைந்த எந்தத் தாயிடமும்

கிடைக்கும். உத்தமத் தாயே யாயினும் உடல் நிலை காரண மாகத் தம் மார்பில் பால் இல்லாது போனாலும் செவிலித் தாயை வைத்துக்கூடப்பாலூட்டி விடலாம். ஆனால் சிவனு டைய அருட் பால் என்றும் வற்றாதது. அவனைத் தவிர வேறு எவராலும் அப் பாலூட்ட முடியாது. ஆகவே அது சாலச் சிறந்ததாயிற்று.

3. பாவியேனுடைய : இச் சொற்றொடரில் உயிர் கள் அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டப்பட் டவை. பாசத்தளைகளால் கட்டுப்பட்டவை. உணர்த்த உணரும் தன்மையன. அவை தம்மையும் அறியா; இறை வனையும் அறியா. ஐம்புல வேடரில் வளர்ந்து அயர்ந்தவை. தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவ னவும், தெய்வத்தைப் பற்றி வருவனவுமான மூவகைத் துன்பத்தை இயல்பாகவே பெற்றவை. இவற்றை "தாபத்ரயம்" என்பர் வடநூலார். ஆணவமாகிய அஞ் ஞான இருளில் கண்கெட்ட குழவிபோல உழல்வன. ஆகை யால் உயிர்களின் இயல்பைத் தன்மேலேற்றி பாவியேன் என்று இரக்கப் பண்பொடு பாடுகின்றார்.

4. ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி : இங்கு தாய்ப் பாலுக்கும் இறைவனின் அருட்பாலுக்குமுள்ள வித்தியா சத்தைக் காட்டுகின்றார். பசுங்குழவியாக இருக்கும்போது குழந்தைக்கு நல்லவை கெட்டவை என்ற அறிவு இல் லாது,உலகம் இத்தகையது என்று அறியாமலும் கிடக்கும். தாய் அதற்குப்பால் புகட்டி ஊனினை வளரச் செய்வதினால் உடல் கனத்து, கரணங்கள் தொழிற்பட்டுப் பிரபஞ்ச மாயையில் உழல ஏதுவாகின்றது. அதாவது தாயின்பால் ஊனினைப் பெருக்கி உள்ளொளியைச் சிறுக்க வைக்கின் றது. ஆனால் இறைவனின் அருட்பாலோ ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கச் செய்கின்றது. ஊன் உருகுதலானது பக்தி மேலீட்டால் "உடல் குழைய என்பெல்லாம் நெக் குருக" என்றபடி உண்டாகும் அனுபவமேயன்றி இறை யன்பு மேற் கொண்டார்க்கு உடலைப் பற்றிய சிந்தனை யில்லா தொழிவதையும் குறிக்கும். இந்த வித்தியாசத்தி னாலேயும் தாயினும் சாலப் பரிந்து என்றதும் பொருத்த மாகின்றது.

5. உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து : உலப்பிலா என்றால் என்றும் அழியாத என்பது பொருள். தெவிட்டாத என்றுகூடச் சொல்லலாம். உலகத்தில் இருக்கும் சகல உயிர்களும் தேடுவது சுகத்தையேதான். இந்த இன்பத் தேட்டையில்தான் எல்லா உயிர்களும் ஈடுபட்டிருக்கின்றன. இந்த இன்பம் இரண்டு விதம், ஒன்று உடலைப் பற்றியது; மற்றொன்று உயிரைப் பற்றியது உடலைப் பற்றிய இன்பம் அறிவுடையது. வினைப் பயனை யூட்டுவது, பிறவிப் பெருங்கடலில் சிக்கவைப்பது. ஆனால் உயிரைப் பற்றிய இன்பமோ அழிவில்லாதது. வினையைக் களைவது; பிறவியை அறுப்பது; இது ஊன் உருகி உள்ளொளி பெருகும்போது உண்டாகும் ஆனந்தம். அதாவது "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்ட நிலையில் உண்டாகும் ஆனந்தம்" இது தாய்ப் பாலால் உண்டாவதன்று. சிவபெருமானின் அருட் பாலுக்கே இத்தன்மை யுண்டு என்பதை ஈண்டு அறிவிக்கின்றார். தேன் என்றதால் எப்படித் தேனானது இனிமையாயிருப்பது மன்றி உடலுக்கு மருந்தாகவும் இருக்குமோ அதுபோல இறைவனின் அருள் உயிருக்கு இனிமையாயிருப்பது மன்றி மருந்தாகவும் இருப்பது என்பது குறிப்பு. சொரிந்து என்பது இடைவிடாது ஒழுகுவதைக் குறிக்கும். "தைலதாரை" என்பர் வடநூலார்.

6. புறம் புறம் திரிந்த செல்வம் : குழந்தையைக் காக்கும் பொருட்டு தாயானவள் அக்குழந்தையைப் பிரியாமல் அது கூடவே அங்குமிங்கும் சுற்றித் திரிவது போல இறைவன் உயிர்களைக் காக்கும் பொருட்டு கேவல, சகல சுத்த நிலைகளிலும் ஒன்றாய் இருந்து இயக்கியும், உடனாயிருந்து உதவியும், வேறாயிருந்து பராமரித்தும் வருகின்றான். முக்கியமாக சகல நிலையில் உயிர்களின் பிறப்புக்கள் தோறும் இறைவனும் உடனாகவேயிருந்து அவற்றின் வினைக்கீடாக தநு கரண புவன போகங்களை நல்கி, அவ்வினையைப் புசிப்பிக்கப் பிரபஞ்ச மாயையில் அழுத்தித் தன் திரோபவ சக்தியால் அவன் அறிவைச் சற்று மறைத்து வினையை அனுபவிக்கச் செய்து சிறிது சிறிதாய் ஆன்மா பக்குவ மடைந்து மலபரிபாகமும், இருவினையொப்பும் சேர்ந்துழி அதனிடம்

அருள் சக்தியைப் பதியச் செய்து தானே குருநாதனுகத் தந்தருளி "அன்னிய மின்மையின்" அரன் கழல் செல்ல வாய்ப்பை அளிக்கின்ருன். ஆகவே பிறவிகள் தோறும் வினைப்பயனை ஊட்டுவிக்கத் திரோபவ சக்தியாயும் பரி பாகம் அடைந்த ஆன்மாக்களுக்கு அருள் சக்தியாயும் மாறிப் புறம்புறம் திரிகின்ருன் என்ருர். இறைவனுடைய அளவற்ற ஆற்றலும் இணையற்ற கருணையும் இதனுல் கூறப்பட்டது.

7. சிவபெருமானே: அவன் ஒருவனே முன்னை வினையிரண்டும்வேரறுத்து முன்னின்ருன், பின்னைப்பிறப்பறுக்கும் பேராளன். அவன் ஒருவனே பரம்பொருள். "பிரமன் அரி என்றிருவர் தம்பேதைமையால் பரம்பரம்என்று இருந்த போது அவர்களின் மமதையையடக்க அடிமுடி மறைத்து நின்றவனல்லனே?" "மாலே பிரமனே மற்ருெழிந்த தேவர்களே நூலே நுழைவரியான் நுண்ணியன்" என்ருர் பிறிதோரிடத்தில். அவன் சொற்பதங்கடந்த தொல்லோன்; ஆயினும் பக்தி வலையில் படுவோன். "அறுவகைச் சமயத் தறுவகையோர்க்கும் வீடு பேருய் நின்றவன் சிவ பெருமானே" "யாதொரு தெய்வங் கொண்டீர். அத் தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனுர் தாம் வருவர்" மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும், பிறக்கும் மேல் வினையும் செய்யும்" என்ற சித்தியார் பாடல் நினைவுறத் தக்கது. அவனே நமது செல்வம்; சேமநிதி; எய்ப்பினில் வைப்பு' அவனே உலக காரணன்; ஆதியந்தமிலாப் பரம் பொருள்; அவன் சிவன்; அவன் பெருமான்.

8, யானுனைத் தொடர்ந்து : தொடர்தல் என்ருல் பின் பற்றுதல். அதாவது சிவன் வழிச் செல்லல். இறைபணி நிற்றல். ஆன்மாக்கள் மலபரிபாகமும், இருவினையொப்பும் அடைந்து சத்திநிபாதம் பதிய அதிகாரி பேதத்தை அனுச ரித்து சரியாதி பாதம் நான்கினும் சோபான முறையில் மேலேறிச் சென்று 'அயரா அன்பில் அரன் கழல் செல் லும்" இதுவே தொடர்தல் என்ற சொல்லால் குறிக்கப் படுகின்றது. தொடர்தலும் அடுத்து வரும் "சிக்கெனப் பிடித்தலும்" சாதனைகள் கூறியவாறு.

9. சிக்கெனப் பிடித்தேன் : வேறொரு பற்றின்றி அரன் கழலே பற்றாகப்பற்றுவதைச்சிக்கெனப்பிடித்தேன் என்ற சொற்றொடரில் குறிப்பிடுகின்றார். அவனைப் பற்று தல் நம்பற்று விடுவதற்கு என்பதைத் திருக்குறளும் கூறு கிறது. "பசுமரத்தாணி யறைந்தாற்போல் ஒரே நினைவாய் குரங்குப் பிடியாய், "துடைக்கினும் போகேன்" என்ற படி இறுகப் பற்றிக் கொள்ளல். ஆன்மா சார்ந்ததைச் சாரும் இயல்புடைத்து. பிரபஞ்சப் பற்றை யொழித்து இறைவனைப் பற்றிக் கொண்டால் "அன்னியமின்மையின் அரன் கழல் செல்லும், "இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும்" அவன் கழலே சிந்தித்தல் என்பது சாதனை. சகல தேச கால அவஸ்தைகளிலும் அவனன்றி வேறுபுகல் இல்லையென்று பற்றிக்கொள்ளுதலே சிக்கெனப் பிடித்தல். இதில் இரண்டு கருத்துக்கள் உள. ஒன்றை விட்டே ஒன்றைப் பற்ற வேண்டுமாகையால், பிரபஞ்ச மாயையை ஒழித்தல் என்பதும் அவனைப் பற்றுதல் என்ப தும் இரண்டு சாதனைகள் இதனில் அடங்கும்.

10. எங்கெழுந் தருள்வது இனியே. இதன் பொருள் ஆழ்ந்த சிந்தனைக் குரியது; இது தேனூறும் திருவாசகம். நான் பற்றிக் கொண்டேன். நான் உன்னை விட்டுப் போக மாட்டேன் என்று சொல்லாமல்,நான் பற்றிக்கொண்டேன் நீ இனிமேல் என்னை விட்டுப் போக முடியாது என்று கூறும் துணிவை என் சொல்வது? சிவபோகம் கைவரப் பெற்ற உயிர் இறைவனோடு ஒன்றி விடுவதால் ஒருவரை ஒருவர் விட்டகலாத கலப்பு ஏற்பட்டு விடுகின்றது. என்ற சுத்தாத்வைத சைவ சித்தாந்தக் கருத்தை இவ்வளவு அழ காய்ச் சித்தரிக்கின்றார் மணிவாசகர். "அவனே தானாகிய நெறி", "தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்", என்று இப்பாட்டில் வருவது ஒரு சிறப்பு, அதன் விளைவு சிவ போகம். பிடித்த பத்தின் ஏனைய பாடல்களில் வேறு வித மாகக் கூறி யிருப்பதைப் பார்க்க.

ஆகவே இத் திருப்பாட்டில் சுத்தாத்வைத சைவ சித் தாந்தக் கருத்துக்களை ஒரு சிறு சிமிழில் அடைப்பதுபோல

அடிகள் அமைத்திருப்பது இப்பாட்டின் தனிச் சிறப்பு எனலாம். பதி, பசு, பாசம் என்ற மூப்பொருள் உண்மை களையும் இதில் காணலாம். பசு பாசத்தால் கட்டுண்டு உழல்வதைப் பாவியேன் என்ற சொல்லாலும் உயிர்களுக்கு மலபரிபாகமும் வரும் பொருட்டு தநுகரண புவன போகங் களை நல்கி வினையைப் புசிக்கச்செய்து பரிபக்குவம் வந்துழி அவனே அருள் பாலிப்பான் என்ற பதி இலக்கணத்தை "புறம் புறம் திரிந்த செல்வம்" என்றும், சிவபெருமான என்றும், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்றும் கூறுவதாலும், தொடர்ந்து என்றதால் சரியாதி சோபான முறையும், சிக்கெனப் பிடித்தல் என்பதால் உயிர் செய்ய வேண்டிய முயற்சியையும், எங்கெழுந்தருளுவதினியே என் பதால் சிவாத்துவித சாயுச்சிய நிலையையும் கூறி, இறைவ னைப் பால் நினைந்தூட்டும் உத்தமத் தாயை விடச் சிறந்தவ ராகக் காட்டுகின்றார். ஏனெனில் தாயார் பால் கொடுக்கும் சமயம் தவிர வேறு சமயங்களில் வேறு வேலையில் ஈடுபட்டி ருக்கக்கூடும். ஆனால் இறைவனோ ஒன்றாய் உடனாய் வேறாய் எப்பிறப்பும்தப்பாமல்கூடவேயிருந்துஇயக்கியும், உதவியும், காத்தும் வருவதால் அவன் தாயைவிடச் சிறந்தவனேதான். "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றார் பிறி தோரிடத்திலும். இறைவனின் அளவற்ற ஆற்றலையும் இணையற்ற கருணையையும், உயிர்களின் கதியற்ற நிலைமை யையும், பாசங்களின் கடுமையான வன்மையையும் அவற்றை விலக்க அவன் அருளும் தன் முயற்சியும் உயிர் களுக்கு வேண்டும் என்பதையும், பரிபக்குவம் அறிந்து இறைவனே அருளி தன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொள் வான் என்பதையும் "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தின" மாதிரி இப்பாடலில் அடிகள் நமக்கு அருள் விநியோகம் செய்கின்றார்.

மாணிக்க வாசகர் திருவடிகளே சரணம்!

—★—

சுந்தரரும் தூதுவளையும்

மு. அ.

நாயன்மார் வரலாறுகளைச் சேக்கிழார் தொகுத்து வரன் முறையாகப் பெரியபுராணம் பாடிய பிறகு, பல தலங்களில் நாயன்மார்களையும், சிறப்பாக அவர்களுள் சமயாசாரியர்களையும், தொடர்புபடுத்திக் கதைகள் பல எழுந்துள்ளன. சில கதைகள் பெரியபுராணத் தொடர்புடைய கதைகள்; பல கதைகள் தொடர்பிருந்த போதிலும், பெரியபுராணத்தில் சொல்லப் பெறாத கதைகள்; சில கதைகள் தல புராணத்தில் கூறப்படும் கதைகள். சுந்தரரோடு தூதுவளைக் கீரையைத் தொடர்புபடுத்தி வழங்கும் கதை இப்படிப்பட்ட ஒரு கதை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூரில் சங்கிலியை மணந்து, பின் தாம் செய்துகொடுத்த வாக்குறுதியை மீறிச் சங்கிலியைப் பிரிந்து வருகையில் இரு கண்ணுமிழந்து, தலயாத்திரை செய்துகொண்டு, பெருமான் அருளால் கண் பெற்று, பரவை நாச்சியாரை அடைந்தபோது அவர் கோபித்து இவரைப் பார்க்க மறுத்து ஒதுக்க, தியாகேசப் பெருமான் நள்ளிரவில் தூது சென்று, சுந்தரரை மீண்டும் பரவையாரோடு கூட்டிவைத்து, அதன்படி சுந்தரர் பரவையோடு உறைந்து தியாகேசப் பெருமானை நன்றியறிதலோடும் மெய்யன்போடும் ஆனந்தமாக வழிபட்டுக் கொண்டிருந்த காலம். அப்போது ஆரூரிலிருந்து சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள அம்பர் என்ற தலத்தில் அந்தணர் மரபில் மாறர் என்ற அடியவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். இவர் நாள் தவறாது சிவபெருமானை வணங்கி சிவனடியார்களையும் சிவ வேடப் பொலிவு உடையவர்களையும் வழிபட்டு உணவளிப்பதை நியமமாகக் கொண்டிருந்தார். திருவைந்தெழுத்தையே மேலான மந்திரமாகக் கொண்டு ஒழுகி வந்தார்,

இவர் ஒரு யாகம் செய்ய எண்ணினர். பொதுவாக யாகத்தில் அளிக்கப்படும் அவிசை சிவபெருமான் அக்கினி முகமாக ஏற்றுக்கொள்கிறார் என்று கருதுவது சம்பிரதாயம். ஆனல் நம்முடைய மாறரோ, தாம் செய்யக் கருதிய யாகத்தில் திருவாரூர் தியாகராசப் பெருமானே நேரில் வந்து அவிசைப்பெறும்படிச் செய்யவேண்டும் என்ற ஆர்வம்கொண்டார். இதற்கு வழியாது என்று ஆராய்ந்தார்.

சுந்தரமூர்த்தி தம்பிரான் தோழர் அல்லவா? ஆகவே அவர் மனம்வைத்தால் அவருடைய தோழராகிய தியாகேசப் பெருமான் யாகத்துக்கு வரும்படி செய்வது முடியாத காரியமல்ல என்ற எண்ணம் உண்டாயிற்று. பரவையார் தமக்காகச் சுந்தரரிடம் பரிந்து பேசும் நிலைமையை உண்டாக்கினல் காரியம் கைகூடும் என்று இவர் எண்ணினர். பரவையார் தம்மிடம் இரங்கும்படி செய்வதற்கு வழி யாது என்று சிந்தித்த வண்ணம் மாறர் திருவாரூர் சென்றார்.

அப்போது திருவாரூரில் பங்குனித் திருவிழா நடந்து கொண்டு இருந்தது. இவரும் பெருமானைத் தரிசித்தும், சுந்தரமூர்த்தியைத் தூரத்திலிருந்தே தரிசித்தும் வந்தார். தம்மை இன்னர் என்று அவரிடம் அறிவித்துக் கொள்ளவில்லை. சுந்தரமூர்த்தி நாள்தோறும் ஆரூர்ப் பெருமான் சந்நிதியில் நின்று திருப்பதிகம் பாடி வருவார். காற்று என்றும், மழை என்றும், பனி யென்றும் பாராமல் அவர் சென்று பாடி வந்தமையினல், பல சமயங்களில் தொண்டை கட்டிக் கொண்டது. நெஞ்சில் கபம் சூழ்ந்தது. அவரால் சரியாகப் பாட முடியவில்லை. இதை மாறர் கண்டு கவனித்து இருந்தார். ஆகவே கபத்தைக் கேட்கக் கூடிய தூதுவளைக் கீரையைத் தினந்தோறும் உண்ணக் கொடுப்பது நல்லது என்று கருதினர். அப்படியே தாம் தினந்தோறும் அதிகாலையில் சென்று, பக்குவமான கொழுந்து க்கீரையும், காய், பூவையும் பறித்துக் கொண்டு வந்து, பரவை நாச்சியார் இல்லத்தில் பொழுது புலர்வதற்கு முன் பிறர் கண்ணில் படாதவாறு சேர்ப்பித்து வந்தார்,

சுந்தரமூர்த்தி காலைக் கடன்களை முடித்துத் திருநீறு அணிந்து அடுக்களைத் தாழ்வாரப் பக்கம் போகும் போது அங்கு தரையில் தண்ணீர் தெளித்து ஒரு வாழையிலையில் கீரை வைக்கப் பெற்றிருப்பதைக் காண்பார். தூதுவளை கபத்துக்கு நல்லது என்று அறிந்தவர் ஆதலால், அதனிடத்தில் விருப்பம் கொண்டார். மேலும் பரவை நாச்சியாரின் மலர்க் கரங்களில் தூதுவளை முள் தைக்குமே என்ற பரிவினால், அவர் தாமே அங்கு அமர்ந்து முள் நீக்கிக் கீரையைப் பக்குவமாக ஆய்ந்து வைப்பார். அப்படி வைக்கும்போது சிவார்ப்பணம் செய்தே வைப்பார். சிறிது நேரத்தில் அவ்விடம் வந்த பரவையாரும் சுந்தரமூர்த்தி கீரை ஆய்வதைக் கண்டு, சுந்தரமூர்த்தி தாமாகவே கீரையைக் கொய்து கொண்டு வந்ததாக எண்ணிக் கொள்வார். பிறகு சமையல் செய்யும் போது, சிவார்ப்பணம் செய்த இந்தப் பகுதியை மட்டும் பிறருக்குப் படைக்கலாகாது என்று கருதி, இதைத் தனியே சமைத்து சுந்தரமூர்த்திக்கே படைத்துவிடுவார். இப் பகுதி போக வேறொரு பகுதிக் கீரையை எடுத்துப் பரவையார் அதைத் தாமே ஆய்ந்து சமைத்துப் பிற அடியார்களுக்குப் படைத்து வருவது வழக்கம். சேரமான் பெருமாள் நாயனர் பல சமயம் இங்கு வந்து சுந்தரரோடு விருந்தினராகத் தங்குவதுண்டு. அவருக்கும் பரவையார் கீரையைப் படைப்பார். அவர் தமக்குப் படைத்ததை எடுத்து சிவார்ப்பணம் செய்து பிறகு உண்பார்.

இவ்வாறு பல நாள் நடந்து வந்தது. மாறர் தம் கருத்து நிறைவேறும் காலத்தை எதிர்நோக்கியிருந்தார். தூதுவளைக் கீரைத் தொண்டினைச் செய்தவர் யார் என்று ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. பரவை நாச்சியார் கீரை பறித்து வந்ததாகச் சுந்தரர் நினைத்து வந்தார். சுந்தரர் பறித்ததாகப் பரவை நாச்சியார் நினைத்தார். பொழுது புலர்வதற்கு முன் கீரை வந்தபடியால், மாறரை ஒருவரும் பார்த்ததில்லை.

நாட்கள் பல சென்றன. இறைவனருளால் மாறருடைய எண்ணம் கைகூடும் சமயும் வந்தது. இடையில் இவர் கீரை

எடுத்து வரும் வழியில் ஓர் ஆறு வெள்ளமாகப் பெருகிவிட்டது. இவர் ஆற்று வெள்ளத்தைக் கடந்து வரும் போது சூரியன் உதித்து ஐந்து நாழிகை ஆகி விட்டது. வழக்கம் போல் அதிகாலையில் அடுக்களைப் பக்கம்வந்து சுந்தரர் கீரையை உரிய இடத்தில் காணாது, "ஏன் கீரை காணவில்லை? என்று பரவையாரை வினவினர். பரவையார் திகைத்தார். சுந்தரருக்கும் தெரியாமல் தமக்கும் தெரியாமல் இத்தனை நாள் எவ்வாறு கீரை வந்தது என்று அவருக்கு ஒரே வியப்பு. தம் ஏவலாளரை வினவி, பொழுது புலருமுன் ஒரு பிராமணர் கீரைத் தொண்டு செய்து வந்தார் என்று அறிந்து கொண்டார். அதன்மேல் "அந்தப் பிராமணர் அடுத்த முறை வரும் போது என்முன் அழைத்து வாருங்கள்" என்று தம் ஏவலாளருக்குக் கட்டளை யிட்டார்.

சிறிது நேரம் தாழ்த்துக் கீரையோடு மாறர் வந்தார். ஏவலாளர்கள் அவர் வந்தமையைப் பரவையாருக்கு அறிவித்தார்கள். அதன்மேல் பரவையார் அவரை நோக்கி, "பெரியவரே, இவ்வளவு காலமாக இந்தப் பணி தாங்கள் செய்து வருகிறீர்களே! தங்களுடைய பணிவிடையை நாங்கள் பெறுவது அபசாரமாயிற்றே! தங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள். நாங்கள் செய்து வைக்கிறோம்" என்று கூறினர். இந்தத் தருணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாறர் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து சுந்தரமூர்த்தி நாயனரிடம் சொல்லித் தாம் செய்யப்போகும் யாகத்தில் இவருடைய தோழரான தியாகராசப் பெருமானே நேரில் வந்து அவிசைப் பெறும்படி செய்யவேண்டும் என்று குறையிரந்தார். கேட்ட பரவையார், தியாகராசப் பெருமான் வரும்படி செய்வது அருமை என்று உணர்ந்த போதிலும் கூட, தாம் கொடுத்த வாக்கை மீற முடியாமல், சம்மதித்தார்.

பின்னர் அவர் சென்று சுந்தரமூர்த்தியிடம் இதைப் பக்குவமாகச் சொன்னர். சுந்தரர் பரவையின் ஊடலுக்கு அஞ்சியவர் ஆனபடியால் தாம் மறுத்தால் மீண்டும் பரவை

யார் ஊடக் கூடுமோ என்று அஞ்சி மறுமொழி கூறுமல் தியாகேசப் பெருமான் சந்நிதியில் சென்று மாறருடைய வேண்டுகோளை விண்ணப்பித்தார்.

வேண்டுவார் வேண்டுவதே ஈகின்றவராகிய பெருமான் "நாம் அவ்வாறே செய்வோம், யாகத்தை நடத்தச் சொல். ஆனல் நம்மை அவன் அறிந்துகொண்டு தக்கபடி நடந்து அவிர்ப்பாகம் தருதல் அவனுடைய கடமை" என்று சொன்னர். கேட்ட சுந்தரமூர்த்தியும் மன மகிழ்ந்து, அவ்வாறே மாறரிடம் தெரிவித்து பெருமான் எழுந்தருளும் போது அவரைக் கண்டுணர்ந்து வரவேற்று அவிர்ப்பாகம் கொடுக்க வேண்டும் என்று எச்சரித்து, போய் யாகத்தைத் தொடங்கும்படி அனுப்பி விட்டார்.

அதன்மேல், மாறர் அப்பருக்குத் திரும்பி அம்பர் மாகாளம் என்று இப்போது வழங்கும் ஸ்தலத்தில் சிறப்பாக யாகம் செய்யத் தொடங்கினர். அந்தணர் பலர் சூழ்ந்திருந்து முறைப்படி சிறப்பாக யாகத்தைச் செய்து வரலாயினர். ஹவிஸ் அளிக்க வேண்டிய நேரம் நெருங்கிற்று. பெருமான் தம் உருவை மாற்றிக்கொண்டு எழுந்தருளினர். தாம் ஒரு புலையன் வேடம் தாங்கி, இடபத்தைச் செத்த கன்ருகத் தோளிற் போட்டுக்கொண்டு, நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாகவும், பூநூலை மத்தளமாகவும், அஷ்டதிக்குப் பாலர்களைப் பறை தம்பட்டம் அடிப்பவர்களாகவும், உமாதேவி ஞானப்பாலை மதக்குடமாகத் தலையில் ஏந்தி வருமாறும், விநாயக சுப்ரமணியரைக் குழந்தை வடிவோடு சூழ்ந்து வருமாறும் செய்து யாக சாலையை அணுகினர். கண்ட அந்தணர்கள் "நீசனே தூரப்போ" என்று வெருட்டினர்கள். ஈசன் அப்போது சற்று ஒதுங்கியதாகப் பாவனை செய்தார். (ஒதுங்கிய இடம ஒளிப்பர் கோவில் என்று இன்று வழங்குவதாகச் சொல்வர்.) மற்ற அந்தணர்கள், புலையன் அருகே இருத்தலாகாதென்று, யாக சாலையை விட்டு ஓடினர்கள். பெரு

மான் இந்தக் கோலத்தோடு யாக சாலையில் நுழைந்தார். மாறர் முன்னமே தமக்குச் சுந்தரர் செய்த எச்சரிக்கையை நினைவிற்கொண்டு, "இப்புலையர் வடிவோடு எழுந்தருளிய வரே தியாகராசப் பெருமான்" என்று முடிவு செய்து, தம் மனைவி சுசீலையோடுகூட வந்தவரை அடியில் வீழ்ந்து வணங்கி வரவேற்று, அவருக்கு முறைப்படி அவிசளித்தார். வந்த தியாகராசப் பெருமான் மனம் மகிழ்ந்து அந்த அவிசைப் பெற்று, மாறருக்கு இடபாரூடராய்க் காட்சி அளித்து, அவ்விடத்திலேயே அனுக்கிரகம் செய்தார்.

இது நடந்த இடமே கோவில் திருமாகாளம் என்று இப்போது வழங்குகிற அம்பர் திருமாகாளம். இங்குக் காட்சி கொடுத்த நாதர் ஆட்கொண்ட நாயகர் என்ற பெய ரோடு ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். திரு அம்பரப் பெருந்திருக்கோயில் திரு அம்பர் மாகாளம் இரண்டுமே பாடல் பெற்ற தலங்கள்.

தம்மைக் கண்டு அஞ்சி ஓடிய பிராமணர்களுக்குச் "சண்டாளராக" என்று பெருமான் சாபமிட்டார் என்றும், அவர்கள் வேண்டுகோளின்மேல், உச்சிக்காலத்தில் ஒரு முகூர்த்த நேரம் மட்டும் அவர்கள் நீசத்துவம் அடை யட்டும் என்று சாபத்தைப் பெருமான் பின்னர் மாற்றினர் என்றும் வரலாறு கூறும். இன்றும்கூட அவ்வந்தண வகுப் பார் "மாத்தியான் ஹிகச் சண்டாளர்" என்று சொல்லப் பெறுகின்றனர்.

மகா காள நாதர் எழுந்தருளிய ஸ்தலம் திரு அம்பர் மாகாளம். இங்கு உற்சவம் ஆண்டுதோறும் வைகாசி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் நடைபெறுகிறது. திரு வாரூர் தியாகராசப்பெருமான் இந்தத் தினத்தில் இங்கு எழுந்தருளி ஹவிஸ் ஏற்ற காரணத்தால், இன்று மட்டும் திருவாரூரில் தியாகராசப் பெருமானுக்கு உச்சிக்கால பூஜை நடைபெறுவது இல்லை. அவர் திருமாகாளத்தில் இப்பூஜை கொண்டருளுவதாக ஐதீகம். இம்மாறர் அறுபத்து மூன்று நாயன் மாருள் ஒருவர்.

மாறர் சோம யாகம் செய்தபடியால் சோம யாஜி மாறர் என்று அவருக்குப் பெயராயிற்று. இவ்வரலாற்றுக்கு ஆதாரம் அம்பர்ப் புராண வரலாறும் கர்ண பாம்பரைச் செய்திகளுமே. பெரிய புராணத்தில் தூதுவளை வரலாறும் இறைவன் புலையன் வடிவோடு வந்த செய்தியும் இல்லை. ஆனால் பெரிய புராணத்தை வடமொழியில் பெயர்த்துச் செய்த உபமன்யு பக்த விலாசம் என்ற வடமொழி நூல் மூன்றும் பாகமாகிய உத்தரபாகம் ஐந்தாம் அத்தியாயம் சோம யாசி மாறர் வரலாறு கூறுகிறது. இவ்வரலாற்றில் தூதுவளைக் கீரையின் செய்தியும் கூறப்பட்டுள்ளது. வைணவ மரபிலும் தூதுவளைக் கீரை சம்பந்தமாக இது போன்ற சுவையான வரலாறொன்று உண்டு.

நாதமுனிகள் தம் பரம்பரையினருக்குத் தாம் உபதேசிக்க எண்ணிய ரகஸ்யார்த்தங்களை எல்லாம் தம்முடைய மாணாக்கரான மணக்கால் நம்பிகளுக்கு உபதேசித்து, தம் புதல்வரான ஈச்வர முனிகளுக்கு ஒரு புதல்வன் பிறந்து அவன் பக்குவம் அடையும் போது, அவனுக்கு அவற்றை உபதேசிக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்துப் பரமபதம் அடைந்தார். பின்னர் உரிய காலத்தில் ஈச்வர முனிகளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து யமுனைத் துறைவர் என்ற பெயரோடு வளர்ந்து வந்தார். இவர் பின்னர் சோழ சபையில் சென்று இராஜ சபையின் வித்வானை வாதத்தில் வென்று அரசனால் பெருஞ்சிறப்புச் செய்யப்பெற்று அரசபோகத்தில் வாழ்ந்து வரலானார். அரசி "இவர் எம்மை ஆளவந்தார்" என்று கூறியமையால் இவர் அது முதல் ஆளவந்தார் என்றே வழங்கப்பட்டார்.

இவரைப் பார்த்து வைணவ தரிசன இரகஸ்யங்களை உபதேசிக்கவேண்டும் என்று கருதி மணக்கால் நம்பிகள் பல முறை பேட்டி காண முயன்றார். அரச போகத்தில் இருந்த ஆளவந்தாரின் பேட்டி கிடைக்கவில்லை. ஒரு யுக்தி செய்தார். அவருக்குத் தூதுவளைக் கீரையில் விருப்பம் அதிகம் என்று

தெரிந்து, அன்று முதல் தினந்தோறும் அறிவை வளர்க்க வல்லதாகிய தூதுவளைக்கீரையைப் பல இடங்களிலும் தேடிக் கொய்து கொண்டு வந்து ஆளவந்தார் மடைப்பள்ளியில் சேர்ப்பித்தார். பரிசாரகன் சமைத்துக் கொடுக்க, ஆளவந்தார் தினந்தோறும் உண்டு வந்தார்.

ஆறு மாதங்கள் ஆயின. கீரையைப் பற்றி எந்தக்கேள்வியும் வரவில்லை. திடீரென்று நான்கு நாள் கீரை கொடுக்காமல் நம்பி நிறுத்திவிட்டார். "ஏன் கீரை சமைக்கவில்லை!" என்று ஆளவந்தார் கேட்ட போது, தினந்தோறும் கீரை கொண்டுவரும் பெரியவர் யாது காரணத்தாலோ வரவில்லை" என்ற மறுமொழி வந்தது. "மறுமுறை அவர் வரும்போது நம்மிடம் அறிவிக்க" என்று ஆளவந்தார் உத்தர விட்டார். இதை அறிந்த மணக்கால் நம்பிகள் மறுநாள் கீரை கொண்டு வந்து கொடுத்தார். இவரை மடைத்தலைவர் ஆளவந்தார்முன் அழைத்துச் சென்றார்.

ஆளவந்தார் அவரை நோக்கி "எதை விரும்பி நீர் தினந்தோறும் இவ்வாறு தூதுவளை கொண்டு வந்து தருகிறீர்" என்று வினவ, அதற்கு நம்பிகள் "உம்மிடம் யாம் எதையும் விரும்பவில்லை. உம்முடைய பிதாமகரான நாதமுனிகள் வைணவ சம்பிரதாயப் பெரும் செல்வத்தை எம்மிடம் வைத்து, தம் திருப்பேரனான உம்மிடம் வழங்கும்படி ஆக்ஞாபித்து இவ்வுலகை நீத்தார். அதன் பொருட்டே யாம் இவ்வளவு நாள் காத்திருக்கின்றோம்" என்று மறுமொழி கூறினார். அதன் மேல் ஆளவந்தார் உணர்வு வந்தவராய், மணக்கால் நம்பிகளிடம் தினந்தோறும் கீதையின் இரகஸ்யார்த்தங்களை எல்லாம் உபதேசம் கேட்டதோடு, சரம சுலோகார்த்தத்தையும் முறைப்படி கேட்டுக் கொண்டார். இது குருபரம்பரை வரலாறு.

இங்கும், மற்றொரு காரியத்தைச் சாதிப்பதற்குத் தூதுவளை ஓர் உபாயமாக அமைந்தது.

தூதுவளை மூலிகை பற்றிய குறிப்பு

தூதுவளை என்ற கீரையின் பெயர் தூதுளம், தூதுளை, தூதுவேளை என்ற பல வடிவங்களில் வழங்குவதுண்டு. தூது என்ற சொல்லுக்குக் கூழாங்கல் என்ற பொருளுண்டு. (கலித்தொகை 56, 16) தூதுவளைக்காய் சிறு கற்குண்டு போல் இருப்பதால், இக் கீரைக்குத் தூதுவளை என்ற பெயர் ஏற்பட்டு இருக்கலாம்.

இது வேலிக்கால்களில் காட்டுக் கொடியாகத்தானே பயிராகும் முள்ளுடைய ஒரு கொடி. இதன் வேர், இலை, பூ, காய், பழம் ஆகிய எல்லாப் பாகங்களும் மருந்துக்குப் பயன்படுகின்றன. தேரையர் நூலில் இதன் ஒவ்வொரு பாகத்தின் பலனும் சொல்லப்பட்டுள்ளது. இலை, கீரை சமைக்கிறோம். பொதுவாக இது கப தோஷத்தை நிவர்த்தி செய்யும்; கபத்தினால் காதில் வரும் எல்லாத் தொந்தரவுகளையும் இது போக்கும். பூ தேக புஷ்டி தரும். காய் கபம், பித்தம், மலபந்தம் முதலியவற்றுக்கு நன்மை தரும்; வற்றலும் இதே பலன். பழம் கபம் முதலான மூன்று தோடங்களை நிவர்த்தி செய்வதோடுகூட, பாம்பு விடத்தையும் தீர்க்கும் என்று சொல்லுவார்கள். வேரும், கொடியும், சுவாசத்தில் வரும் ரோகங்களைப் போக்கும். இலையைப் பிழிந்து காதில் இட்டால் காதில் எழுச்சி குணமாகும். சமூலம் செய்யில் காய்ச்சி க்ஷயரோகத்துக்கும், காச ரோகத்துக்கும் கொடுத்து வர நல்ல பயன் உண்டு. பொதுவாகத் தூதுவளை அறிவு விருத்தி தர வல்லது.

ஆயுள் உறுப்பினர்

நம் சமாஜ 57 ஆம் ஆண்டு விழா இளைஞர் மாநாட்டுத் தலைவர் திரு. T. S. பழநிவேல் அவர்கள் (158, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-1) சமாஜ ஆயுள் உறுப்பினரானார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"செந்தமிழ் வித்தகர்" திரு. அ. ச. ஞா. அவர்களுக்குப்

(ஆவணி மூல விழா 4—9—65)

பாராட்டுரை

ந. ரா. முருகவேள்

அருமைமிகு தமிழ்மொழியும் அரியசைவத் திருநெறியும்
உரிமைமிக வளர்த்துவரும் உயர்தருமை ஆதீனம்
பெருமைமிகப் பிறங்குசுப் பிரமணிய தேசிகநற்
குருமணிதன் திருவடிகள் சென்னிமிசைக் கொள்ளுகின்றேன்.

தேவணியும் சிவபெருமான் சிறந்ததிரு வாசகமாம்
பாவணியும் மணிமொழியார் பொருட்டாகப் பரிகொணர்ந்த
ஆவணிநன் மூலவிழா ஆண்டவனின் அருட்டிறத்தைப்
பூவணிய உணர்த்திநிற்கும் பொருள்பொதிந்த மாட்சி
[மைத்தாம்.

அத்தகைய திருநாளை, அறிஞர்தமைத் திறம்தெரிந்து
மெய்த்தகவிற் பாராட்டும் விழாவாக்கி, வியன்கயிலை
உத்தமநற் குருமணிதான் உளம்மகிழ்ந்தார்! அறிஞர்பலர்
வித்தகச்சீர் பாராட்டி மிகவாழ்த்திச் சிறப்பளித்தார்.

அந்தஅருட் செயல்முறையில் அறிஞர்உயர் அ. ச. ஞா.
''செந்தமிழ் வித்தகர்''என்னும் சிறந்தநல்ல பெரும்பட்டம்
இந்தினிய ஆண்டின்கண் இனிதளிக்கப் பெற்றதிறம்
எந்தமைப்போல் வார்க்கெல்லாம் எல்லையிலா மகிழ்ச்சிதரும்!

தண்ணியல்நற் செந்தமிழும் தகவொளிரும் சைவமுமா
நண்ணுமொரு பெருங்குடம்ப நல்லுறவில், எனக்கரிய
அண்ணன்என விளங்குபவர் அரும்பெறற்சீர் அ. ச. ஞா.!
உண்மைஇது முக்காலும்! வெறும்முகமன் உரையன்று.

அரும்பெறல்என் அண்ணனையான் அகமகிழ்ந்து துதித்தேத்தி
விரும்பிமிகப் போற்றுநல்ல மேவரிய பெருவாய்ப்பைப்
பொருந்துமுறை எனக்களித்த புகழ்க்கயிலைக் குருமணிக்குத்
திரும்பவும்என் நன்றியினைப் பலமுறையும் செலுத்துகின்
[றேன்.

நல்லதமிழ்ச் சிவநெறியை ஞானசம்பந் தப்பெருமான்
பல்வகையில் முன்னுளில் பரப்பிமிக வளர்த்தளித்தார்
சொல்லிடின்,இன் றதனைத்தம் சொல்லாலும் எழுத்தாலும்
ஒல்லும்வகை பரப்பிவரும் உயர்அறிஞர் அ. ச. ஞா,

நாடறிந்த நல்லபெரு நாவலவர்! பெருங்கலைஞர்
பீடுயர்ந்த தமிழுளமும் பெருந்தகைமைப் பண்புமிக்கார்!
ஈடின்றிச் சிறந்தொளிர்ந்தே இந்நாளைத் தமிழறிஞர்
கூடுமுயர் பேரவையில் முன்னணியிற் குலவிநிற்பார்

அருந்திறல்என் அண்ணன்உயர் அ.ச.ஞா. சிறப்பையெலாம்
இருந்தெண்ணி யான்உரைத்தல் இயலுவதோ? தமிழ்க்கட
அருஞ்சைவப் பெருமலையும் ஆம்.அ.மு. சரவணனுர் [லாய்,
பெருந்தவத்திற் பெற்றெடுத்த பிள்ளைஎனில் போதாதோ?

நற்பேரும் புகழுமிகு நல்லறிஞர் அ. ச ஞா.
மூற்போக்குக் கொள்கைநலம் மூதுணர்வின் நுட்பமதி
பெட்போடு கண்டுவந்து பெருந்தகையார் திரு. வி. க.
நட்போடு நயந்தன்பிற் பழகினரேல், நவிறலென்னே!

விச்சைபல கற்றுவல்லோன்! மேதக்கோன்! வியன்கலைஞன்!
அச்சமிலா ஆராய்ச்சி அறிஞன்!உயர் அ. ச. ஞா.
பொச்சமிலாப் பளிங்குளத்தான்! புகழ்ச்சான்ருேர் மு.வ.
பச்சையப்பன் கல்லூரிப் பணிசெய்த பாங்குநன்றே! [வோடு

அலகில்புகழ் நலஞ்சான்ற அண்ணன்உயர் அ. ச. ஞா.
பலகலையும் பயின்றுணர்ந்து பண்பமைந்த பேரறிஞர்
தலைசிறந்த இந்நாளைத் தமிழ்ச்சான்ருேர் தெ பொ. மீ
இலகுபெரும் அன்புநண்பும் எய்தினரேல், இயம்பலென்னே!

இலக்கியநல் கலைநூலும், இராவணன்மாண் பொடுவீழ்வும்,
கலக்கமிலாக் கவிஞர்பிரான் கம்பன்கவிப் பயன்நூலும்
துலக்கமுறும் மொழிபெயர்ப்புச் சுவைநூலும், பலஅளித்த
நலத்தினராம் அ.ச.ஞா. நலங்களெலாம் அளப்பரிதால்.

சென்னையரசு உயர்கல்வி மொழிபெயர்ப்புத் திகழ்துறைபின்
நன்னர்எழில் நெறியாளர் எனஏற்று நயந்ததெனில்
மன்னுமென்நல் அண்ணனின்பல் மாட்சிமைகள் பற்றிவிரித்து
இன்னுமிக இயம்புவதென்? இனிதிவர் தாம்வாழ்கநன்றே.

மக்கள்பலர் பட்டநல்கிப் பாராட்டின் மாண்புறுவர்!
மிக்கபலர் அவர்போலார் மேதகையால் ஒருசிலர்தாம்
தக்கதம்மாற் பட்டங்கள் சால்புபெறத் தகஒளிர்வார்!
அத்தகையார் ஒருசிலருள் அ. ச. ஞா. தலைசிறந்தார்.

ஆனாலும், நம்தருமை அருட்குருமா மணிஅவர்கள்
தேனாரும் "செந்தமிழ்வித் தகர்"என்னும் சிறந்தபட்டம்
தான்,ஆநம் மகிழநல்கித் தாம்மகிழ்ந்தார்! இருவரையும்
ஊனார உளமார உவந்தேத்தி வாழ்த்துகின்றேன்.

மதிப்புரை.

திருமயிலையும் பூம்பாவையும்

"திருமயிலையும் பூம்பாவையும்" என்ற நூல் ஒன்று நம் சமாஜத் தலைவர் வித்துவான் திரு, G. M. முத்துசாமி பிள்ளை I. A S' (Rstd.) அவர்களால் எழுதப்பெற்று சமாஜ வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூல் திருமயிலையைப் பற்றிய வரலாறு, புராணச் சான்றுகள் முதலியவற்றைக் கூறுவதுடன் நம் சமயச் சார்பு பெற்றதால் திருமயிலை ஏற்றம்பெற்ற விதத்தினையும் இனிது விளக்குகிறது. அவற்றுள் பூம்பாவையின் வரலாறு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. மேலும்,

பாமர மக்களும் நம் சமய உண்மைகளை உணர்ந்து கொள்ள, காலத்துக்கேற்ற நிலையில் நாடகமே மிகப் பயன்படும் என்று நுனித்தறிந்து பூம்பாவையின் வரலாற்றை மிகவும் கவர்ச்சியாக ஆசிரியர் நாடக முறையில் வெளியிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்நாடகம் பயனில் சொல்லற்றதாய் இன்சொலுற்றதாய் சமய உண்மைகள், நீதிகள், நம் திருமுறைப் பாடல்கள், சமயக் கருத்துகள் நிறைந்ததாய் நாடகக் கண்கொண்டு பார்த்தாலும் இன்பந் தரத்தக்கதாய் இலங்கியுள்ளது. பாடசாலைகள், மன்றங்கள் முதலியவற்றில் நடிக்கும் நாடகங்களுக்கு

மாணவர்களுக்கு இதனைப் பயன்படுத்தின் மாணவருலகம் இளமையிலேயே நற்சூழ்நிலை யெய்தப்பெற்று முன்னேறும் என்பது ஒருதலை. சைவப்பெருமக்கள் யாவரிடமும் இருக்க வேண்டிய நூலிது. யாவரும் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகின்றோம். வேண்டுவோர் சமாஜச் செய லாளருக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை 50 காசுகள், தபாற் செலவு வேறு.

(அம்பை சங்கரன்)

திருக்கழுக்குன்றப் பெருமான் திருப்பதிகங்கள்

திருக்கழுக்குன்றத்தில் நிகழ்ந்த இருபதாம் ஆண்டு ஆனிமகத்திருமுறை இன்னிசைப் பெருவிழாவில் "திருக் கழுக்குன்றப் பெருமான் திருப்பதிகங்கள்" எனும் இந் நூல் வெளியிடப் பெற்றது. இது வாலாஜாபாத் இந்து மத பாடசாலையின் அண்ணாவாக விளங்கிவரும் திரு. நா.ப. தணிகையரசு அவர்களால் இயற்றப்பெற்றது. திருவாச கத்தில் தோய்ந்த இவ்வாசிரியர் அதனை அடியொற்றியே பத்துப் பத்துகளாக 100 பாக்கள் காப்புச் செய்யுள் 1. ஆக 101 பாடல்கள் பாடியுள்ளார். பாக்கள் எளிமையும் இனிமையும் பக்திரசம் ஊட்டும் தன்மையும் வாய்ந்தவை. எல்லா இன்பங்களும் இப்பாக்களில் இலங்குகின்றன எனச் சுருங்கக் கூறலாம். அன்பர்கள் யாவரும் வாங்கிப் படித்துப்பயன் பெறுவார்களாக. நூல் கிடைக்குமிடம்: வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, செங்கற்பட்டு மாவட்டம். விலை குறிப்பிடப் பெறவில்லை (அம்பை)

பிரதோஷ வழிபாடு

"பிரதோஷ வழிபாடு" என்ற நூல் ஒன்று நம் சமா ஜத் தலைவர் வித்துவான் திரு. G. M. முத்துசாமி பிள்ளை I. A. S. (Retd) அவர்களால் எழுதப்பெற்று சமாஜவெளி யீடாக ஆடிப் பிரதோஷ நன்னாளில் வெளிவந்துள்ளது.

நம் சமய சம்பந்தமான பல விழாக்களைப் பற்றியும் விளக்கங்களைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் நன்று. அவ் விழாக்களுள் ஒன்றே பிரதோஷமாகும். இந்நூலில் பிர தோஷ விழா தோன்றியவிதம், வழிபாட்டுமுறை, வழி பாட்டின்பயன் முதலியவற்றை இதன் ஆசிரியர் மிகத் தெளி வாகப் பல நூல்களைக்கொண்டு ஆய்ந்து வெளியிட்டுள்ளது போற்றத் தக்கது. இதுபோன்று நம் சமய பிற விழாக்க ளைப் பற்றியும் வெளியிடின் நலம். இந்நூலையாவரும் படித் துப் பயன்பெற வேண்டுகின்றோம். வேண்டுவோர் சமா ஜச் செயலாளருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். இதன் விலை 20 காசுகள். தபாற் செலவு வேறு.

—(அம்பை சங்கரன்)

பொன் மொழிகள்

“வாழ்க்கையில் எது உண்மையான இன்பம்?

மிக உயர்ந்த குறிக்கோள் என்று உன்னால் ஒப்புக் கொண்ட ஒன்றிற்கு உன்னை அர்ப்பணித்துக்கொள்வது; உன் உடம்பு குப்பை மேட்டில் எறியப்படுவதற்குமுன் உன் உடம்பை அந்த உயரிய பணியில் அறவே தேய்த்துக் கொள்வது;உலகம் உன்னை இன்பமாக வைத்துக்கொள்ள அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையே என்று குறைகூறிக் கொண்டிருக்கும் சுயநலத் துன்பப் பிண்டமாகயில்லாமல் இயற்கையாற்றலின் அங்கமாயிருப்பது.

எது உண்மையான துன்பம்?

இழிவான காரியம் என்று நீ அறிந்த ஒன்றிற்கு அற் பர்கள் உன்னை உபயோகப்படுத்த அனுமதிப்பது”

—பர்னார்ட் ஷா,

பின்வரும் நாலடிச் செய்யுளையும் ஓர்க:

"யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்"

—கொ. நீ. சி.

டாக்டர் ஆல்பர்த் சுவைட்ஸர் மறைவு

தனது 90ஆம் வயதில் டாக்டர் சுவைட்ஸர் (Dr. Albert Scweitzer) 4—9—65 அன்று மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள லாம்பரீன் என்ற இடத்தில் காலமானார். தாம் எழுதிய Indian thought and its Development (இந்திய தத்துவமும் அதன் வளர்ச்சியும்) என்ற அரிய நூலில் தமிழர் நாகரீகத்தைப் பற்றியும், முக்கியமாகத் திருவள்ளுவரின் திருக்குறளைப் பற்றியும் வெகு சிறப்பாக எழுதியுள்ளார். முக்கியமாக தமிழர்கள் உலகம் நிச்சயப் பொருள் என்று கொள்வதும், கொல்லாமை, இரக்கம் முதலியவைகளையே கோட்பாடாகக் கொள்ளுவதும் மற்றையவர்களுடைய கொள்கைகளைவிட மிகச் சிறந்ததென்று பாராட்டியுள்ளார். சுவைட்ஸர் உலகப் பிரசித்திபெற்ற தத்துவஞானி. அவரது கொள்கை எல்லா உயிர்களுக்கும் இரக்கம் பூண்டு ஒழுகுதல் (Humanism) என்பது ஆகும். அவர் வைத்திய நிபுணர், இசை வல்லுநர், நல்ல கிறிஸ்துவர். அன்பு நெறியைப் பிரசாரம் செய்வதில் பயனில்லை, அதை வாழ்ந்து காண்பிக்க வேண்டும் என்ற விரதம் பூண்டு தமது சிறு வயதிலேயே ஆப்பிரிகா கண்டத்தில் காட்டுப்பிரதேசத்திலுள்ள 'லாம்பரீன்' என்ற இடத்தில் ஒரு ஆஸ்பத்திரியை ஆடம்பரமில்லாமல் ஏற்படுத்தித் தாழ்த்தப்பட்ட ஆப்பிரிக்க மக்களுக்கு சுமார் 50 ஆண்டுகளாகப் பணி புரிந்து வந்தார். 1952ஆம் ஆண்டு அவருக்கு 'நோபெல்' சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. பிறர் நோய் கண்டு இரக்கம் காட்டிய பெரியார் சுவைட்ஸர். சைவத்திற்கு அடிப்படையான அன்பு நெறியை வளர்த்த பெரியார். அவர் பணிக்கு நம்மவர் அஞ்சலி உரித்தாகுக.

(நல். மு.)

நம் சமாஜத்தாரால் நடத்தபெறும் சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகள் நவம்பர் மாதம் மூன்றும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் (20—11—65 & 21—11—65) சேலம், நாகர்கோவில், பந்தநல்லூரையடுத்த திருச்சிற்றம் பலம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நிகழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேர்வு எழுதுவோர்களுக்கு இடம் முதலியன நேராய் எழுதப் பெறும்.

பிற செய்திகள்

காவேரிப்பாக்கம் சன்மார்க்க வார வழிபாட்டுச் சங்கம் நான்காம் ஆண்டு நிறைவு விழா கொங்கணேசுவரர் ஆலயத்தில் செப்டம்பர் 30, அக்டோபர் 1, 2 கிழமைகளில் சிறப்புற நிகழ்ந்தது.

காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் 43ஆம் ஆண்டு குருபூஜை 21—9-65ல் திருவொற்றியூரில் நிகழ்ந்தது. அதையொட்டி 10—10—65 அன்று மேலைமாம்பலம் காசி விஸ்வநாதர் கோயிலில் மகேஸ்வர பூஜை, சமயச் சொற்பொழிவுகள் முதலியன நிகழ்ந்தன.

புரசைத் திருநெறிக் கழக 55ஆம் திங்கள் வழிபாடு 19—9—65ல் சென்னையில் புரசை வேம்படி விநாயகர் கோயில், ஆதி விநாயகர் கோயில், குயப்பேட்டை சித்தி விநாயகர் கோயில், படைவேட்ட அம்மன் கோயில், வினை தீர்த்த விநாயகர் கோயில், கந்தசாமி கோயில் முதலிய திருவிடங்களில் சிறப்புற நிகழ்ந்தது.

செப்டம்பர் 9ஆம் தேதி சிதம்பரம் வடக்கு வீதியில் திரு. சம்பந்தம் பிள்ளை புதல்வி கேதாரவல்லிக்கும் சிரஞ்சீவி வரதராஜனுக்கும் திருமணம் நடந்தது. இத்திருமணத்தில் மிகவும் சிறப்பான அம்சம் திருமுறை ஓதுதல். சம்பந்தம் பிள்ளை காலை நாலரை மணிக்கு வயது முதிர்ந்த சிறப்பான ஓதுவா மூர்த்திகள் இருவரைக்கொண்டு திருமணம் நிகழப் போகுமிடத்தில் திருப்பள்ளி யெழுச்சி பாடுவித்தார். தொடர்ந்து திருமணச் சடங்குகள் தொடங்கும் நேரமாகிய 8-30 மணி வரையில் அவர்கள் திருமுறை ஓதினார்கள். அதன்பின் திருமணச் சடங்குகள் தொடங்கி நடைபெற்ற போது. திருமாங்கல்ய தாரணநிலை வந்தவுடனே பிற வாத்தியங்களை நிறுத்தி, ஓதுவார்கள் பன்னிரு திருமுறைகளையும் ஓதினார்கள். மற்றச் சடங்குகள் தொடர்ந்து நடைபெற்றன. மணமக்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

இவ்வாறு சைவ மக்கள் திருமணங்களில் திருமுறை ஓதுவதற்குச் சிறப்புக் கொடுத்து ஓதச் செய்தல் மிகவும் முக்கியமான ஒரு முறையாகும். இத்திருமணத்தில் ஓதிய திருமுறைப்பாடல்களை அண்ணாமலைச் சர்வகலாசாலைப் பேராசிரியர் க. வெள்ளை வாரணர் அவர்கள் மிக்க சிரத்தையெடுத்து மங்கலச் சொல்லே பயின்ற பாடல்களாகப் பொறுக்கி யெடுத்துக் கொடுத்தார்கள். அப்பாடல்களைத் தெரிந்துகொள்ள அன்பர் பலர் விரும்பியபடியால் அவற்றின் முதற்குறிப்பை மட்டும் கீழே தருகிறோம்,

பண்ணிலாவும் மறை (1.2 3), பெண்ணமர் மேனியினு ரும் (2.69.1), மண்ணில் நல்ல வண்ணம் (3.24.1), மாதர்ப் பிறைக்கண்ணி யானை (4 3.1), அன்னம் பாலிக்கும் (5.1.1), அப்பன் நீ அம்மை நீ (6.95.1), பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை (7.59.1), விண்ணுளும் தேவர்க்கு மேலான வேதியனை (திருவாசகம் 184), ஆனந்த வெள்ளத் தழுந்துமோர் (திருக்கோவை 307), பத்தியாய் உணர்வோர் (திருவிசைப் பா 184), சேலுங்கயலுந் திளைக்கும் (திருப்பல்லாண்டு 8), அப்பனை நந்தியை ஆரா அமுதினை (திருமந்திரம் 36), திரு வாக்கும் செய்கருமங் கை கூட்டும் (பதினோரா ந்திருமறை), அரசுகொள் கடன்களாற்றி, என்றும் இன்பம் பெருகும் இயல் பினால் (பெரிய புராணம் 76 இறுதி).

நம் சமாஜ உறுப்பினர் சிதம்பரந் தாலுகா, வையூர் கிராமம் திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களுக்கும் கொத்தட்டை திரு. இராசுப்பிள்ளை அவர்கள் திருமகளார் திருமதி அசலாம்பிகை அம்மையாருக்கும் கொத்தட்டையில் 12—9—65 அன்று சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது. புது மணமக்கள் நீலமேனி வாலிழை பாகத்தோன் அருளால் எல்லாச் சிறப்புகளும் இனிது பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

சென்னைச் சைவ சித்தாந்த
சமாஜத் திங்கட் கணிதாய்வர்
என்னத் திகழும் இனியதிரு
நாவுக் கரசர் மைத்துனராய்
மன்னிப் பொலியும் நற்பால
கிருஷ்ணர் அசலாம் பிகையோடு
துன்னிச் சிறந்த பலநலங்கள்
துதைந்து நன்று வாழியவே!

—ந. ரா. முருகவேள்

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.